1980 ஜூலை 9] *[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]*

[முற்பகல் 10-20]

குடிசைகளிலே இருந்த பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு அவர்களுக்கு 100 ரூபாய் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீ விபத்திலே பாதிக்கப்பட்டவர் களுக்குத்தான் 100 ரூபாய் என்ற உத்தரவு போடப்பட்டு இருக்கிறது, இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 ரூ. கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய மற்ற உதவிகளும் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுப் பணித் துறை அதிகாரிகள் அஜாக் கிரதையாக இருந்தார்கள் என்று சொல்வது சரியல்ல. பொதுப்பணித் துறை அதிகாரிகள் வெள்ளம் வந்தால் எப்படி தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பார்த்து அந்த முறையிலே போர்க்கால நடவடிக்கைகளை எடுத்திருக் கிறார்கள். வெள்ளம் வந்தால் எதை எதை சேகரிக்க வேண்டுமோ மணல் மூடை, சவுக்கு மரம், சிமின்ட் இவைகள் எல்லாம் தேவைக்கும் அதிகமாக சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன, என்ற தகவல் இருக்கிறது. ஆகவே இந்தச் சபையை ஒத்திவைத்து அதை விவாதிக்க வேண்டிய நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அதைப் பற்றி விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்புகள்.

(அ) தூத்துக்குடி பகுதியில் அயல் நாட்டுக் கப்பல்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து, பேரவை விதி 54 இன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிற கவன ஈர்ப்பு. திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பொ. விஜயராகவன், இ. முத்துராமலிங்கம் ஆகியோர் இருக்கைகளில் இல்லை. திரு. இரா. தாமரைக்கனி.

<u>திரு. இரா. தாமரைக்கனி :</u> தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்—

*"தூத்துக்குடி துறைமுக பகுதியில் வெளிநாட்டு மீன்பிடி படகுகள் நடமாடுவதால் அங்குள்ன மீனவர்கள்மத்தியில் நிலவும் கவலை குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு சூலை திங்கள் 1 ஆம் நாளன்று ''சக்தி'' என்ற கடற்படைக் கப்பல் கேப்டன் திருப்பதி என்பவரால் ஆறு அந்நிய நாட்டு மீன்பிடி கப்பல்களில் ஒன்றான 'யுன்ஷின்' என்ற கப்பலை தூத்துக்குடி துறைமுகத்திற்கருகில் மீன் பிடித்தபோது அதனை சூழ்ந்து பிடித்து, அதிலிருந்து 18 அயல் நாட்டவர்களையும் கைப்பற்றினார். மேற்படி 18 பேரும் தாய்வான் நாட்டவர்கள் என்பதும் அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்பதும் தெரியவந்தது. இந்த மீன்படி கப்பல் 120 அடி நீளமுள்ளதும், மற்றும் அதில் நைலான் வலைகளும், மீனும், இருந்ததாகவும், டீஸல் இருப்பும் குளிர்பதன வசதி உள்ளதும் தெரியவந்தது. மேற்படி 18 அயல் நாட்டவர் களும் பாஸ்போர்ட் வைத்துள்ளனர். மேற்படி அயல் நாட்டவர் களுடன் மணப்பாடுக்கருகில் ஒரு சிறிய சண்டை நிகழ்ச்சிக்குப் பின் ஹெலிக்காப்டர் உதவியுடன் அக்கப்பலும் 18 அயல் நாட்டவர்களும் பிடிக்கப்பட்டனர். ஆனால் மற்ற ஐந்து அயல் நாட்டு மீன்பிடிக் கப்பல்களும் தெற்கு திசையில் தப்பிச் சென்றுவிட்டன.

அக்கப்பலில் இருந்த சுமார் 30 டன் மீன்களில். 25 டன் மீன்கள் மீன்துறையால் 5—7—1980 வரை அப்புறப்படுத்தப் பட்டு, குளிர்பதன அறையில் வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மீன்களும் அக்கப்பலிருந்து அகற்றப்பட்டு வருகின்றன. 4 டன் மீன்களை மீன் துறை 3 நபர்களுக்கு ஏலம்விட்டு அதன் விற்பனை மூலம் ரூ. 12,460 பெறப்பட்டது. மீதமுள்ள மீன் களை விரைவில் பகிரங்க ஏலத்தில் விட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வாறு அயல்நாட்டு மீன்பிடிக்கப்பல்கள் இந்திய மீன்பிடி எல்லைக்குள் மீன்பிடிப்பதை தடுக்கும்பொருட்டு மீன்துறைக்குச் சொந்தமான கலன்களுடன் மீன்துறை அதிகாரி கள் காவல்துறை அதிகாரிகளுடன் தூத்துக்குடித் துறை முகத்தில் தயார் நிலையில் உள்ளனர்.

திரு, இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மாண்பு மிகு நிதி அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே இவ்வாறு அயல்நாட்டு மீன்பிடிக் கப்பல்கள் இந்திய மீன்பிடி எல்லைக் குள் மீன்பிடிப்பதை தடுக்கும்பொருட்டு மீன் துறைக்குச் சொந்தமான கலன்களுடன் மீன் துறை அதிகாரிகள் காவல் துறை அதிகாரிகளுடன் தூத்துக்குடி துறைமுகத்தில் தயார் நிலையில் உள்ளனர் என்று தெரிவித்து இருப்பதற்காக நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

1980 ஜூலை 9] [திரு. இரா. தாமரைக்கனி]

வல்லரசுகளின் தூண்டுதலின் பேரில் மீன்பிடி படகுகளைப்போன்ற அயல்நாட்டுக் கப்பல்கள் உளவு வேலைக்காக வருவதாகத் தெரிகிறது. ஆகவே இதைப்பற்றியும், முன் கூட்டியே அன்னியர் படையெடுப்பைத் தடுக்கிற முறையிலே யும் மத்திய அரசுக்கு மாநில அரசு தகவலை அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவை தைவான் நாட்டைச் சேர்ந்த மீன்பிடி கப்பல்கள். அவர்கள் 6 கப்பல்களிலே வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்திய அரசினுடைய மீன்பிடி எல்லைக்குள் வந்ததன் காரணமாக அப்படிப்பட்ட தகராறு ஏற்பட்டது. அங்கே இருந்த மீன்துறை அதிகாரிகளும் காவல் துறை அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்ததின் பேரில், இந்திய அரசு கப்பல் படை உதவியின்பேரில் ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தி அந்தக் கப்பல்களைப் பிடிக்க முயன்றதில் 5 கப்பல்கள் தப்பி விட்டன. ஒன்றே ஒன்று பிடிபட்டது. அந்தக் கப்பலிலே இருந்த சுமார் 30 டன் மீன்களில் 25 டன் மீன்கள் அப்புறப் படுத்தப்பட்டு, குளிர்பதன அறையில் வைக்கப்பட்டு, பிறகு ஏலம் விடப்பட்டது. அவர்கள் வேவு பார்ப்பதற்காக வந்ததாகத் தெரியவில்லை. காரணம் அவர்களுக்கு அவர்களுடைய மொழியைத் தவிர வேறு எந்த மொழியோ ஆங்கிலமோ தெரியவில்லை. அது மட்டுமல்ல, அந்தப் படகின் அடிப்படைத் தன்மைகள், வலைகள், இவைகள் எல்லாம் பார்த்தால் அடிக்கடி மீன்பிடிப்பதற்கு வருகின்ற கப்பல்கள் என்று தெரிகிறது. ஜப்பான் நாட்டிலிருந்தும், தைவான் நாட்டி லிருந்தும் மீன் பிடிக்க அவைகள் அடிக்கடி வருவது உண்டு. ஆழ்கடலில் அவர்கள் மீன் பிடிப்பதிலே தவறில்லை. இந்திய மீன்பிடி எல்லைக்குள் வந்த காரணத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போது உஷார் படுத்தப்பட்டிருக்கிறார் கள். ஆகவே அவைகள் வேவு பார்க்க வந்த படகுகளாகத் தெரியவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

(ஆ) அத்தியாவசியப்பண்டங்களின் பதுக்கலைத் தடுக்கும் நடவடிக்கைகள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்—

''சென்னை நகரில் பெருமளவில் பாமோலின் எண்ணெய் சூன் மாதத்தில் கைப்பற்றப்பட்டது குறித்து''